**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.134/2022 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.1 |
| Name : | திருமதி. புனிதா |
| Father's Name/Husband Name: | திரு. ஆனந்தசெல்வம் |
| Village : | பெரம்பலூர் |
| Taluk : | பெரம்பலூர் |
| Age : | 30/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 18.03.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 முதல் 3 வரை ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**
**முதல் விசாரணை**

நான் தற்போது பெரம்பலூர் கிராமத்தில் வசித்து தனியார் கல்லூரி ஒன்றில் உதவி பேராசிரியராக பணி செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். இந்த வழக்கு சம்பவம் குறித்து எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டேன். மேல்நடவடிக்கையை நாங்கள் வலியுறுத்தவில்லை. 1ம் எதிரிக்கும் எனக்கம் சிறு சிறு குடும்ப பிரச்சனைகள் ஏற்பட்டு அதன் விளைவாக போலிசாரிடம் புகார் ஒன்று கொடுத்தேன். எந்த மாதம், எந்த தேதி, எந்த நேரத்தில் எதிரிகளில் யார் என்னை என்ன வாசகம் சொல்லி திட்டி கொடுமைப்படுத்தினார்கள் என்றோ, யார் யார் என்னை எதனால் அடித்தார்கள் என்று என்னால் குறிப்பாக சொல்ல இயலவில்லை. **புகாரில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு நினைவில்லை. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையின் போது கடந்த 19.11.2018ம் தேதி அன்று 1ம் எதிரிக்கும் எனக்கும் பாலமுருகன் கோவிலில் திருமணம் நடந்ததாகவும் அதன்பின்னிட்டு எதிரி வெளிநாடு சென்று திரும்பி வந்ததாகவும், அப்பொழுது வீட்டிலிருந்த மற்ற எதிரிகள் உடல் ரீதியாக கைகளால் அடித்து மன ரீதியாக அசிங்கமாக பேசி கொடுமை செய்ததாகவும் அது சம்மந்தமாக 2019ல் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து பின்னர் சமாதானம் செய்து வைத்தார்கள் என்றும், 02.11.2020ம் தேதி இரவு 10.45 மணியளவில் எனது கணவர் 3ம் எதிரி வீட்டில் இருப்பதை அறிந்து அவரை அழைத்த போது அவர் அசிங்கமாக பேசினார் என்றும் பின்னர் 03.11.2020ம் தேதி காலை 11 மணியளவில் எதிரி என்னை உடல் முழுவதும் மாறி மாறி உதைத்து கைகளால் அடித்து தலைமுடியை பிடித்து இழுத்து கொடுமை செய்து வீட்டை விட்டு வெளியே துறத்திவிட்டார் என்று போலிசாரிடம் புகார் கொடுத்துவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டதால் என்பதாலும் இருவரும் தனித்தனியாக பிரிந்து வாழ்வதாலும் எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று பிரதிநிதித்துவம் செய்யப்பட்டது. அதனால் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in
the presence of Witness and read over
to the witness and admitted by the
witness to be correct.

Sd/-xxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.